# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/02 - 2025 ජූනි මස 30 වැනි සඳුදා - 2025.06.30

*2443/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்கள் (பொது)**

**சுங்கக் கட்டளைச் சட்டம்**

**சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 101 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்**

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 145(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 101 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளை பிரகடனம் செய்கின்றேன்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

நிதி,திட்டமிடல் மற்றும்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2025, யூன் 30 ஆந் திகதி.

**ஒழுங்குவிதிகள்**

01. இந்த ஒழுங்குவிதிகள் "**2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சுங்க (வட்டி விகிதம்) ஒழுங்குவிதிகள்**" என எடுத்துக்காட்டப்படலாம்.

02. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 145(1) இன் நோக்கத்திற்கான வட்டி விகிதம், 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க படுகடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 30 இன் அடிப்படையில் சந்தை வட்டி விகிதமாக (ஆண்டொன்றிற்கு) இருப்பதுடன், இது மேன்முறையீடு செய்தாலும், அத்தகைய அபராதம் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட திகதியிலிருந்து (அதாவது கட்டளை பிறப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து) பணம் செலுத்தும் திகதி வரை நாளாந்த அடிப்படையில் (ஒவ்வொரு நாட்காட்டி ஆண்டினையும் பயன்படுத்தி) கணக்கிடப்படுதல் வேண்டும்.

03. முழுத்தொகை செலுத்தும் திகதி வரை அபராதம் அல்லது பறிமுதல் தொகையின் செலுத்தப்படாத தொகைக்கு, எளிய வட்டி அடிப்படையில் (ஆண்டொன்றிற்கு) வட்டி கணக்கிடப்படுதல் வேண்டும்.

04. ஒழுங்குவிதிகள் 02 இன் நோக்கத்திற்காக அபராதம் அல்லது பறிமுதல் கட்டளையை பிறப்பிக்கும் நேரத்தில் விசாரணை அலுவலர், அத்தகைய கட்டளை திகதியிலிருந்து ஏழு (07) வேலை நாட்களுக்கு விஞ்சாமல் ஒரு சலுகை காலத்தினை, சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து அத்தகைய சலுகைக் காலத்திற்கான தேவை நியாயப்பாட்டினை எழுத்துப்பூர்வ கோரிக்கையாக பெறுவதன் பெயரில் வழங்கலாம். அத்தகைய சலுகைக் காலத்தை வழங்குவது விசாரணை அலுவலரின் தற்றுணிவிற்கு உட்பட்டது. சலுகைக் காலம் வழங்கப்பட்டால், அக்காலம் கட்டளையில் பதிவு செய்யப்படும். அவ்வாறு வழங்கப்பட்ட சலுகைக் காலத்திற்குள் அபராதம் அல்லது பறிமுதல் முழுமையாக செலுத்தப்படாவிட்டால், அத்தகைய அபராதம் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட திகதியிலிருந்து வட்டி திரட்டப்பட்டதாகக் கருதப்படும்.

05. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் அறவிடப்படும் ஒவ்வொரு வட்டியும் திரட்டு நிதியிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

06. இந்த ஒழுங்குவிதிகள், நடைமுறைக்குவரும் திகதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் கீழ் ஏற்படும் அபராதங்கள் மற்றும் பறிமுதல்களுக்கு மட்டுமே இந்த ஒழுங்குவிதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

07. இந்த ஒழுங்குவிதிகள் 2025.06.30 முதல் செயல்வலுப் பெறுதல் வேண்டும்.

EOG 07 - 0053

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.